

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 3.9.2025 அன்று TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில், இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில் உள்ள வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தில், இங்கிலாந்து அமைச்சர், நாடாளுமன்ற துணை செயலாளர் (இந்தோ–பசிபிக்) கேத்தரின் வெஸ்ட் அவர்களை சந்தித்து, பல்வேறு துறைகளில் தமிழ்நாடு – இங்கிலாந்து ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் TN RISING ஐரோப்பிய பயணத்தின் இரண்டாம் கட்டத்தில் 3.9.2025 அன்று இங்கிலாந்து நாட்டின், இலண்டன் நகரில், ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் தலைமைப் பரிமாற்ற அலுவலர் நிக்கலோ கிராடி ஸ்மித் அவர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் அந்நிறுவனத்தின் விரிவாக்கப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

### குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் ரூ.80 இலட்சம் மதிப்பில் மலைப்பாதை சீரமைத்தல்

# ரூ.65 இலட்சம் மதிப்பில் கோவில் திருமதில் அமைக்கும் பணிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

*சேலம், செப். 6 -*

*சேலம் மாவட்டம், சன்னியாசிகுண்டு அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மலைப்பாதை சீரமைத்தல் மற்றும் கோவில் திருமதில் அமைக்கும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, முன்னிலையில் நேற்று முன்தினம் (04.09.2025) தொடங்கி வைத்தார்கள். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை வாயிலாக திருக்கோவில்களின் வளர்ச்சிக்கான அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்கத் திட்டம், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் மீட்பு, திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு, திருக்குளங்களை புனரமைத்தல், திருக்கோவில்களில் திருப்பணிகள் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதுடன், சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளையும் விரைவாக நிறைவேற்றி வருகிறார்கள்.*

*அந்தவகையில் இன்றைய தினம், அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் ரூ.80 இலட்சம் மதிப்பில் மலைப்பாதை சீரமைத்தல் பணிகளும் மற்றும் ரூ.65 இலட்சம் மதிப்பில் அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலை சுற்றி திருமதில் அமைக்கும் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. திருப்பணிகளை அனைத்தையும் உரிய காலத்திற்குள் தரமானதாக கட்டி முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்கள்.*

*இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, அறங்காவலர்கள் குழுத்தலைவர் A.A.ஆறுமுகம், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி வே. சபர்மதி, உதவி ஆணையர் ராஜா, மண்டலகுழுத் தலைவர் கே.டி.ஆர். தனசேகர், மாமன்ற உறுப்பினர் திருஞானம், செயற்பொறியாளர் திருமதி செந்தாமரை, செயல் அலுவலர் திருமதி கலைச்செல்வி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.*

### பணியின் போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை ஒப்படைத்த

# தூய்மைப் பணியாளர் கிளாராவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, செப். 6 -

தூய்மைப் பணியாளர் சகோதரி கிளாரா அவர்களின் நேர்மையை பாராட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு

**தூய்மைப் பணியின்போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை நேர்மையோடு காவல்துறையிடம் சகோதரி கிளாரா அவர்கள் ஒப்படைத்த செய்தியைப் பார்த்து நெகிழ்ந்தேன்.**

**எளியவர்கள் எப்போதும் நேர்மையின் பக்கம்தான் என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாக மின்னிடும் தங்கை கிளாராவுக்கு எனது அன்பும் பாராட்டுகளும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# துப்புரவுப் பணியாளர் கிளாராவுக்குப் பாராட்டு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெகுமதி வழங்கி சிறப்பித்தார்!

சென்னை, செப். 6 -

தூய்மை பணியின் போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களுக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புத்தாடை மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

சென்னை ராயபுரம், காசிமேடு பகுதியைச் சேர்ந்த பெயிண்டராக பணியாற்றி வரும் ராமச்சந்திரன் என்பவரின் மனைவி திருமதி கிளாரா (வயது 39) அவர்கள், திருவான்மியூர் பகுதி 180 வது வார்டில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வருகின்றார். இந்த தம்பதியினருக்கு செல்வி ரா.சூசை மேரி (வயது 18), செல்வி ரா.சுவாதி (வயது 13), செல்வி ரா.நிக்கிதாஸ்ரீ (வயது 10) என்ற 3 பெண் குழந்தைகள் உள்ளனர்.

துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான, மருந்தீஸ்வரர் திருமண மண்டபத்தில் தூய்மை பணியில் ஈடுபட்ட போது கீழே கிடந்த 1 பவுன் தங்கச் சங்கிலியை கண்டெடுத்து, நேற்று முன்தினம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

இந்த செய்தியை அறிந்து துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களை குடும்பத்துடன் தனது முகாம் அலுவலகத்திற்கு அழைத்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் . உதயநிதி ஸ்டாலின் அவர்கள், துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களின் நேர்மையை பாராட்டினார். மேலும் புத்தாடையும், தி.மு.க இளைஞரணி அறக்கட்டளையின் சார்பில் வெகுமதியும் வழங்கி அவரது நேர்மையான பணிக்கு வாழ்த்துப் தெரிவித்தார்.

துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களின் குடும்பத்தினருடன் உரையாடிய தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், லண்டனில் இருந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தன்னை அழைத்து, பாராட்டு தெரிவிக்குமாறு தொலைபேசியில் தெரிவித்தார் என்றும், தமிழ்நாடு திரும்பியதும், உங்களை நேரில்சந்திக்க ஆர்வமாக இருப்பதாகவும், கிளாரா குடும்பத்தினரிடம் தெரிவித்தார்.

### "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் 40 பயனாளிகளுக்கு

# ரூ. 11 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

*கரூர், செப். 6 -*

*கரூர் மாநகராட்சி வார்டு எண் 29, 30 மற்றும் கரூர் ஊராட்சி ஒன்றியம். நெரூர் வடக்கு பகுதிகளுக்கு "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்றது. கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். 40 பயனாளிகளுக்கு ரூ. 11லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.*

*பின்னர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு மக்களிடம் சிறந்த வரவேற்பினைப்பெற்ற ஒரு உன்னதமான திட்டமாக "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் அமைந்துள்ளது. கரூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமானது 179 இடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு 3ம் தேதி வரை 102 முகாம்கள் நிறைவு பெற்றுள்ளது. இம்முகாம்கள் மூலம் இது வரை 73.917 மனுக்கள் வரப்பெற்றுள்ளன. இதில் 26,194 மனுக்கள் கலைஞர் உரிமைத் தொகைகோரி விண்ணப்பங்களாக பெறப்பட்டுள்ளது.*

*இம்முகாம்களில் பெறப்பட்ட ஒரு சில மனுக்களுக்கு அந்தந்த முகாம்களிலேயே தீர்வு அளிக்கப்படுகிறது. ஒரு சில மனுக்களுக்கு ஒரு வார காலம் எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்வுகாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து மனுக்களுக்கும் 45 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 45 நாட்களுக்குள் அனைத்து மனுக்களுக்கும் தீர்வு காண மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

*இவ்வாறு வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.*

*இதனைத் தொடர்ந்து வருவாய்த் துறையின் சார்பாக 21 நபர்களுக்கு வகுப்புச் சான்று. வருமானச் சான்று உள்ளிட்ட சான்றிதழ்களையும், கூட்டுறவுத் துறையின் சார்பாக 5 நபர்களுக்கு ரூ 11லட்சம் மதிப்பீட்டில் மகளிர் சிறு வணிக கடனுதவிகள் மற்றும் மகளிர் உதவிக்குழு கடனுதவிகள், கரூர் மாநகராட்சியின் சார்பாக 8 நபர்களுக்கு சொத்துவரி பெயர் மாற்றம். காலிமனை வரி விதிப்பு, பிறப்பு சான்றிதழ்கள். எரிசக்தித் துறையின் சார்பாக இணைப்பு பெயர் மாற்றத்திற்கான ஆணைகள், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக 2 நபர்களுக்கு சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான ஆணைகளும் என மொந்தம் 40 நபர்களுக்கு ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வி. செந்தில்பாலாஜி வழங்கினார்.*

*இம்முகாமில் மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி ஆணையர் கே.எம். சுதா, கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்எஸ். ராஜா, மாமன்ற உறுப்பினர்கள்உள்ளாட்சிபிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முகாம்களில் பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.*

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!

*நாமக்கல், செப். 6 -*

*நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*



*நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் வரும் 08.09.2025 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு திருச்செங்கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் இறால் நடன சபாபதி தலைமையில் நடைபெற உள்ளது.*

*அது சமயம் இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள் :*

*கழக முப்பெரும் விழா குறித்து,*

*கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து .*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*





ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி ஊத்துக்குளி ஊராட்சி, கருத்தேவன்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் அறிவுத்திறன் வகுப்பறை அமைத்தல் ( smart Class interactive Panel) வகுப்பை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் திறந்து வைத்தார். இதில் மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியச் செயலாளர் கதிர்வேல், பேரூர் கழக செயலாளர் சரவணன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் சிறப்பு முகாம்களின் ஒருபகுதியாக, கரூர் தொகுதி, கரூர் கிழக்கு ஒன்றியம், நெரூர் வடக்கு பகுதி சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற சிறப்பு முகாமில், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்றுக்கொண்டு, அனைவருக்கும் உணவு வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.